ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1939/26 - 2015 නොවැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.05
*1639/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

*49 அ ஆம் பிரிவின் கீழான கட்டளை*

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 49அ ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தற்றுணிபு அதிகாரங்களின்படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அபிவிருத்தி செயல்நுணுக்க மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், இக்கட்டளை மூலம் இத்தால் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணியை 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனமாகிய இலங்கை முதலீட்டுச் சபைக்குத் தேவைப்படுகிறது என இத்தால் அறிவிக்கிறேன்.

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி செயல்நுணுக்க மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2015, நவெம்பர் 04.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், யட்டிகஹ கோரல தெற்கு, குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளதும் பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர் அனஸ்லே வி. லியனகே இனால் வரையப்பட்ட 2015, செத்தெம்பர் 09 ஆந் திகதிய 3595 ஆம் இலக்க வரைபடத்தில் அ, ஆ, இ1, ஈ1 என்ற துண்டுகளாகக் குறிக்கப்பட்டவற்றில் இருந்து பின்வருமாறு எல்லைகளையும் 12.053 ஹெக்டெயார் (29ஏ. 2றூட். 5.39பே.) பரப்பளவினையும் கொண்ட காணித்துண்டுகள்.

**1. துண்டு இல. அ**

வடக்கு : தும்மோதர - கலகும்புர வீதி ;

கிழக்கு : தும்மோதர - போகின்கமுவ வீதி, கிராமவாசிகளுக்குச் சொந்தமான நெற்காணியின் ஒரு பகுதி ;

தெற்கு : துண்டு ஆ, நெற்காணியின் ஒரு பகுதி ;

மேற்கு : தும்மோதர - கலகும்புர வீதி மற்றும் ஏரியின் ஒரு பகுதி.

பரப்பளவு - 3.6896 ஹெக்டெயார் (9ஏ. 0றூ. 18.75 பே.)

***2. துண்டு இல. ஆ***

வடக்கு : துண்டு அ ;

கிழக்கு : துண்டு அ வின் ஒரு பகுதி மற்றும் நெற்காணி ;

தெற்கு : ஏரி ;

மேற்கு : ஏரி.

பரப்பளவு - 0.9832 ஹெக்டெயார் (2ஏ. 1றூ. 28.73 பே.)

***3. துண்டு இல. இ 1***

வடக்கு : கிராமவாசிகளுக்குச் சொந்தமான காணி ;

கிழக்கு : ஏரியின் ஒரு பகுதி, துண்டு ஈ 2, துண்டு இ 2, துண்டு ஈ 1 இன் ஒரு பகுதி ;

தெற்கு : குளியாப்பிட்டி - குருநாகல் பிரதான வீதி மற்றும் துண்டு இ2 இன் ஒரு பகுதி ;

மேற்கு : பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிலஅளவையாளர் திரு. அனஸ்லே வி. லியனகே இனால் வரையப்பட்ட 3364 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 1.

பரப்பளவு - 7.0038 ஹெக்டெயார் (17ஏ. 0றூ. 9.09 பே.)

***4. துண்டு இல. ஈ 1***

வடக்கு : துண்டு இ 1 இன் ஒரு பகுதி ;

கிழக்கு : துண்டு இ 1 இன் ஒரு பகுதி, ஏரியின் ஒரு பகுதி மற்றும் துண்டு ஈ 2 இன் ஒரு பகுதி ;

தெற்கு : துண்டு ஈ 2 இன் ஒரு பகுதி ;

மேற்கு : துண்டு இ 1.

பரப்பளவு - 0.3764 ஹெக்டெயார் (0ஏ. 3றூ. 28.82 பே.)

*11- 519*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.